சுயாதீன மதிப்பீட்டாளர்கள் மற்றும் NAITA இன் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு, பொதுவான இயல்புடைய சொத்துக்களின் நடைமுறை சந்தை விலை காணப்படும் போது, அவ்வாறான சொத்துக்களின் நியாயமானப் பெறுமதியைத் தீர்மானிக்கும் போது அவ்வாறான சான்றுகள் கவனத்தில்கொள்ளப்படும். அச் சொத்துக்கள் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியில் கொண்டு செல்லப்படும், பின்னரான காலப்பகுதியில் திரண்ட தேய்வு மற்றும் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட தினத்திற்குப் பின்னர் அறவிடப்பட்ட திரண்ட நட்டஇழப்புக்களை விட குறைவு. சொத்தொன்றை மீள் மதிப்பீடு செய்யும் போது, கொண்டு செல்லப்படும் பெறுமதியில் ஏதேனும் அதிகரிப்பு வேறு விரிவான வருமானமாக இனங்கண்டு மீள் மதிப்பீட்டுக் குழுவின் கீழ் உரிமைத்துவத்துடன் சேர்க்கப்படும், அதனை வருமானக் கூற்றில் முன்னரே இனங்கண்டு அச்சொத்தின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியில் குறைவினை பிரதிபலிக்கும்

பெறுமதியை தவிர்த்து, முன்னர் செலவிடப்பட்ட குறையும் பெறுமதிக்கான அதிகரிப்பு வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது.

மீள் மதிப்பீட்டில் எழும் கொண்டு செல்லப்படும் பெறுமதியின் குறைவு வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளதோடு, அச்சொத்தின் முன்னரான மேலதிகப் பெறுமதியில் ஈடு செய்யும் எந்தவொரு குறைவும் ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காண்பது அது குறித்து மீள் மதிப்பீட்டு மேலதிகப் பெறுமதியில் உள்ள எந்தவொரு கடன் மீதியின் பெறுமதிக்கேயாகும். சொத்துக்களின் எந்தவொரு மிகையும் வருமானக் கூற்றில் செலவாக ஏற்றுக்கொள்ளப்படும்.

சொத்தொன்று தொடர்பாக மீள் மதிப்பீட்டுக் குழுவின் எஞ்சியிருக்கும் எந்தவொரு மீதியும், ஓய்வுபெறும் போது அல்லது ஆதனங்களை அகற்றும் போது நிறுத்திவைத்த வருமானத்திற்கு நேரடியாக மாற்றப்படும். நிலையான சொத்துக்களின் சுவீகரிப்பு, நீடிப்பு அல்லது விருத்தி செய்வதற்கான அல்லது வருவாய் திறன்விருத்தி, வினைதிறன் அல்லது செயற்பாட்டின் வினைதிறனை அதிகரித்தலுக்காக ஏற்கப்படும் பின்னைய செலவுகளானது மூலதன செலவாகக் கருதப்படும். சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதிகள் இனங்காணப்பட்டுள்ளது.

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை அகற்றுகையில் அல்லது மாற்றுகையில் அவற்றை பயன்பாட்டின் பின் எதிர்கால பொருளாதார பிரதிலாபங்களை கொண்டவை அல்ல என இனங்காணவில்லை. சொத்துக்களை இனங்காணாததால் ஏற்படும் எந்தவொரு இலாபம் அல்லது நட்டத்தினை (தேறிய சொத்தினை அகற்றுவதனால் பெறப்படும் வருமானம் மற்றும் சொத்துக்களை கொண்டு செல்லும் பெறுமதிக்கு இடையில் காணப்படும் வேறுபாடானது பெறுமதியாகக் கணக்கிடப்படும்) மீளாய்வாண்டின் விரிவான வருமானக் கூற்றின் “ஏனைய செயற்பாட்டு இலாபத்தில்“ இனங்காணவில்லை.

சொத்தொன்றிற்கு அறவிடக்கூடிய எதிர்கால பொருளாதார பிரதிலாபங்கள் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஈட்டிக்கொள்வதற்கான நிகழ்தகவு காணப்படும் அருவச் சொத்தொன்றாக இனங்காணப்பட்டுள்ளதோடு, சொத்துக்களின் கிரயத்தை உறுதியாக அளவீடு செய்ய முடியும்.

நிறுவனத்தினால் ஏற்கப்படும், பயன்பாட்டிற்கான உறுதிப்பத்திரத்தை பெற்றுள்ள, அதனுடன் தொடர்புடைய வன்பொருட்களுக்கு அவசியமற்ற, தெளிவாக அடையாளம் காணக்கூடிய, நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும், உறுதியாக அளவீடு செய்யக்கூடிய மற்றும் எதிர்கால பொருளாதார வருவாய்களுக்கு வழிவகுக்கும் என கருதக்கூடிய சகல கணனி மென்பொருள் கிரயங்களும் அருவச் சொத்து வகுதியின் கீழ் நிதி நிலைமை மற்றும் குறைந்து செல்லும் திரண்ட தேய்வு மற்றும் திரண்ட சேதஇழப்பு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படும்.

மூலதனமாக்க முடியாத குறுங்கால இருப்பு உருப்படிகள் நிதி செயலாற்றுகை கூற்றிலிருந்து பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இவ் உருப்படியை நிர்வகிக்கும் நோக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, பௌதீக ரீதியில் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

**தேய்மானம் கணக்கிடப்படுவது, சொத்துக்களின் பயன்தறு ஆயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டு நேர்கோட்டு முறை அடிப்படையிலாகும்.**

| **சொத்துக்களின் வகுதி** | **தேய்வு வீதம்** |
|---|---|
| குத்தகைக் காணிகள் | குத்தகை கால அடிப்படை |
| கட்டிடங்கள் | 5% |
| பொறிகளும் உபகரணங்களும் | 10% |
| தளபாடங்கள், பொருத்துகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 10% |
| கணனிகளும், பாகங்களும் | 25% |
| மோட்டார் வண்டிகள் | 25% |
| நூலக புத்தகங்கள் | 10% |
| பயிற்சி உபகரணங்கள் | 10% |
| அருவச் சொத்துக்கள் | 10% |

6. **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

கையிலுள்ள காசு, வங்கி வைப்புகள், குறுங்கால முதலீடுகள், காசு மற்றும் காசுக்கு சமமானவை என வரையறுக்க முடியும்.

கையிலுள்ள காசு மற்றும் வங்கி வைப்புகள், குறுகிய கால முதலீடுகள், இடமாற்றப்படும் காசு, காசுப் பாய்ச்சல் கூற்றின் போது காசு மற்றும் காசுக்கு சமமானவை எனக் கருதப்படும்.

7. **பரிப்புகள் மற்றும் ஏற்பாடுகள்**

ஐந்தொகையின் திகதியில் உள்ளவாறான அனைத்து பரிப்புக்களும் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, தற்போது காணப்படுவதாக கருதப்படும் பரிப்புக்களுக்காக போதுமானளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பினும், அவற்றின் பெறுமதியை சரியாக கணிப்பிட முடியவில்லை. கேள்விகளின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகள் அல்லது ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருட காலத்தில் மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகளானது நிதிக் கூற்றில் நடைமுறைப் பரிப்பாக கருதப்படுகின்றது. ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருடத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள் நடைமுறை அல்லாத பரிப்பாக நிதிக் கூற்றில் கருதப்படுகின்றது.

8. **பணிக்கொடை ஏற்பாடு**

சகல பணியாளர்களுக்கும் ஆரம்ப ஆண்டிலிருந்து செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்கங் கொண்ட ஏற்பாடுகள் சட்டம் மற்றும் இலங்கை நிருவாக சேவையின் 16 ஆம் பிரிவிற்கு அமைவாக, பணியாளர் ஒருவர் தொடர்ந்து 5 வருட சேவையைப் பூர்த்தி செய்கையிலேயே இப்பரிப்பானது வலுவுடையதாகும்.

**9. வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்**

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகைகள் செலவுகளாக வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. அதிகார சபை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF), ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் (ETF) பணியாளர்களின் மொத்தச் சம்பளத்தில் 15% மற்றும் 3% இற்கு குறையாத தொகைகளை பங்களிப்புச் செய்கின்றது.

**10. வருமானம்**

அரசாங்கத்தினால் கிடைக்கப்பெற்ற மானியங்கள், மீண்டெழும் செலவாக பெற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மானியங்கள் மற்றும் அதிகார சபையின் பல்வேறு நிதிசார் செயலாற்றுகை கூற்றில் செலவு வைக்கப்பட்டுள்ளது. மூலதனக் கொடையிலிருந்து, பிரதான புதுப்பித்தல்கள் மற்றும் மூலதன சொத்துக்களின் அதிகரிப்பிற்காக செலவு செய்யப்பட்ட தொகையானது நிதிசார் செயலாற்றுகை கூற்றுக்கு மூலதனமாக்கம் செய்யப்படாததோடு, சமமான தொகை மூலதன கொடையிலிருந்து மாற்றப்பட்டுள்ளது.

நிலையான சொத்துக்களில் இனங்காணப்பட்ட பரிப்புகள் மற்றும் தேய்வுகளுக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டதன் பின்னர் மிகை / பற்றாக்குறை அல்லது செலவினை மிஞ்சிய வருமானம் ஏற்பட்டது.

அதிகார சபையை செயற்படுத்துகையிலும், அதன் மூலதன சொத்துக்களை வினைத்திறனாக பராமரிப்பதற்கும் ஏற்படும் அனைத்து செலவுகளும் வருவாயில் வசூலிக்கப்படுகின்றன.

**11. மூலதன பொறுப்புகள் மற்றும் உறுமுரிமை பரிப்புக்கள்**

அனைத்து பொருள் ரீதியான மூலதனப் பொறுப்புகளையும், உறுமுரிமை பரிப்புக்களையும் கவனத்திற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் தேவையான மாற்றங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**12. ஐந்தொகை தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்**

ஐந்தொகை தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகளை இனங்கண்டு தேவையான சந்தர்ப்பங்களின் போது கணக்குகளில் அவசியமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

**13. காசுப் பாய்ச்சல் கூற்று**

பிற்போடப்பட்ட வருமானங்கள் குறைதல் / அதிகரித்தல் காசு சாராத அசைவுகளாக நிதிப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

**கடந்த ஆண்டுகளிலான நிதியின் சிறப்புக் கண்ணோட்டம்**

| | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரச கொடைகள் - மீண்டெழும் | 685,000,000.00 | 768,000,000.00 | 904,645,000.00 | 1,175,060,000.00 | 1,161,995,000.00 | 1,083,500,000.00 | 1,093,500,000.00 | 1,188,500,000.00 | 1,087,500,000.00 |
| உழைத்த வருமானம் - ஏனைய வருமானங்கள் | 67,354,991.71 | 72,034,104.41 | 84,823,081.48 | 75,623,487.49 | 97,493,599.90 | 55,559,579.48 | 78,309,067.10 | 148,583,986.67 | 522,490,782.08 |
| பயிற்சி தொடர்பான செலவுகள் (நேரடி) | 94,044,974.14 | 92,702,284.14 | 150,091,924.26 | 247,766,374.97 | 150,768,898.25 | 77,721,986.60 | 147,935,464.17 | 237,606,197.20 | 279,378,385.91 |
| ஏனைய தொழிற்பாட்டு செலவு | 849,008,383.72 | 1,988,806,886.51 | 1,108,983,620.51 | 1,206,693,785.30 | 1,454,706,777.74 | 1,236,972,539.42 | 1,272,724,304.65 | 1,431,000,939.46 | 1,668,237,390.98 |
| மொத்த இலாப விகிதம் | 80.37 | 70.64 | 75.43 | 77.17 | 80.40 | 88.55 | 82.67 | 76.33 | 52.83 |
| தேறிய இலாப விகிதம் | (15.40) | (35.43) | (0.14) | 1.15 | (13.92) | (3.74) | (4.40) | 0.43 | (4.74) |
| நடைமுறை விகிதம் | 2.72 : 1 | 2.19 : 1 | 0.84 : 1 | 1.20 : 1 | 1.02 : 1 | 1.39 : 1 | 1.68 : 1 | 1.82 : 1 | 2.43 : 1 |
| துரித விகிதம் | 2.61 : 1 | 2.07 : 1 | 0.79 : 1 | 1.14 : 1 | 0.96 : 1 | 1.33 : 1 | 1.62 : 1 | 1.71 : 1 | 2.33 : 1 |
| சொத்துக்கள் மீதான பிரதிலாபம் | (9.89) | (34.57) | (0.11) | 1.03 | (5.79) | (1.38) | (1.96) | 0.22 | (1.92) |


மீண்டெழும் கொடைகள்
1,400,000,000.00
1,200,000,000.00
1,000,000,000.00
800,000,000.00
600,000,000.00
400,000,000.00
200,000,000.00
0.00
2015
2016
2017
2018
2019
2020
2021
2022
2023


உழைக்கப்பட்ட வருமானம்
600000000
500000000
400000000
300000000
200000000
100000000
0
2015
2016
2017
2018
2019
2020
2021
2022
2023


பயிற்சி தொடர்பான செலவுகள் (நேரடி)
300000000
250000000
200000000
150000000
100000000
50000000
0
2015
2016
2017
2018
2019
2020
2021
2022
2023


வேறு தொழிற்பாட்டு செலவுகள்
2,500,000,000.00
2,000,000,000.00
1,500,000,000.00
1,000,000,000.00
500,000,000.00
0.00
2015
2016
2017
2018
2019
2020
2021
2022
2023

தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் விதிமுறைகளின் தேவைப்பாடு மீது 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

----------------------------

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

--------------------------------------------------

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரமான எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, அதிகார சபையின் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

(அ) வருமானத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த எதிர்வரும் ஆண்டுகளுக்கான முழு நேர மற்றும் பகுதி நேர கற்நெறிக் கட்டணங்கள் அதாவது ரூ. 123,980,669 தொகையானது மீளாய்வாண்டில் வருமானமாக கருதி கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டில் பற்றாக்குறையாகவும் முற்பண வருமானமானது அத் தொகையினால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 19 இன் 61 ஆவது பந்திக்கு மாறாக அதிகார சபையினால் பணிக்கொடையினை ஒதுக்கும் போது ஊழியர்கள் இறுதியாக பெற்றுக் கொண்ட சம்பளங்களையும் சேவைக் காலத்தையும் மட்டும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. அங்கு ஊழியர்களின் சேவைக் காலம் மற்றும் சம்பளம் சரியாக கருத்தில் கொள்ளப்படாத காரணத்தினால், மீளாய்வாண்டில் பணிக்கொடை ஒதுக்கீடுகளில் ரூ. 15,063,462 தொகை அதிகமாக காட்டப்பட்டிருந்த காரணத்தினால் ஆண்டின் பற்றாக்குறையும் பணிக்கொடை ஒதுக்கீட்டு கணக்கும் அத் தொகையினால் அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 19 இன் 61 ஆவது பந்திக்கு மாறாக அதிகார சபையினால் 3 வருட விளைதிறனான வாழ்க்கை காலத்துடன் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 03 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூ. 2,170,800 பெறுமதியான கிரயமான வைரஸ் காப்பு மென்பொருள் வருடமொன்றிற்கு நூற்றுக்கு 10 வீத தேய்மான அடிப்படையில் மேற்கொள்வதனால் ஏனைய அருவச் சொத்துக்களின் தேய்மானக் கணிப்பீட்டின் தவறு காரணமாக மீளாய்வாண்டில் கடந்த ஆண்டிற்காக தேய்மானச் செலவு முறையாக ரூ. 1,146,479 மற்றும் ரூ. 13,537,537 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூ. 1,146,476 தொகை குறைவாகவும் அருவச் சொத்து கணக்கு மீதி ரூ. 14,684,016 தொகையும் திரட்டிய மிகை கணக்கின் மீதி ரூ. 13,537,537 தொகையும் அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கட்டுநாயக்க எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிற்சி நடவடிக்கைகளை விருத்தி செய்யும் கருத்திட்டத்தின் கீழ் அமைச்சினால் பயிற்சி உபகரணங்களை பயன்பாட்டு நிலைமைக்கு கொண்டு வந்தமைக்காக 2021 ஆம் ஆண்டில் செலவளிக்கப்பட்ட ரூ. 68,483,520 தொகையானது, குறித்த உபகரணங்கள் மற்றும் சொத்துக்கள் கணக்குகளில மூலதனமாக்கப்பட வேண்டியிருப்பினும், கட்டிட கணக்கில் மூலதனமாக்கிய காரணத்தினால் பயிற்சி உபகரணங்கள் கணக்கின் மீதி மற்றும் கட்டிட கணக்கின் மீதி அப்பெறுமதியினால் முறையாக குறைவாகவும் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது.

(உ) நிதிதக் கூற்றுக்களின் படி நூலகத்தின் புத்தகங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள், கணனி பாகங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்களுக்காக மீளாய்வாண்டிற்கான தேய்மானம் முறையாக ரூ. 183,689 உம், ரூ. 17,337,769 உம், ரூ. 58,120,905 மற்றும் ரூ. 101,316,642 என காட்டப்பட்டிருப்பினும், கணக்காய்வு கணிப்பீட்டின் படி அப் பெறுமதி முறையாக ரூ. 1,085,846 உம் ரூ. 15,157,964 உம், ரூ. 61,072,840 மற்றும் ரூ. 90,661,425 தொகைகளாக இருந்ததனால் மீளாய்வாண்டில் தேய்மான செலவு ரூ. 8,980,930 பெறுமதியினால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ஆண்டின் பற்றாக்குறையும் நிலையான சொத்துக்களும் ரூ. 8,980,930 பெறுமதி குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் பெறப்பட வேண்டிய செயலாற்றுகை கொடுப்பனவு ரூ. 5,406,178 பெறுமதி கணக்கு வைக்கப்படாத காரணத்தினால் ஆண்டின் பற்றாக்குறை மற்றும் பெறப்பட வேண்டிய செயலாற்றுகை கொடுப்பனவு அப் பெறுமதியினால் முறையாக அதிகமாகவும் குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(எ) கடந்த ஆண்டிற்கான நிபுணதா சிசு சவிய மாணவர் உதவுத் தொகை செலவு ரூ. 29,080,000 பெறுமதி மீளாய்வாண்டின் செலவாக காட்டப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டில் பெறப்பட வேண்டிய மாணவர் உதவுதொகை ரூ. 44,526,000 பெறுமதி வருமானமாக காட்டப்பட்டிராத காரணத்தினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூ. 73,606,000 பெறுமதி அதிகமாகவும், திரட்டிய நிதி ரூ. 29,080,000 பெறுமதி அதிகமாகவும் மற்றும் பெறவேண்டிய மாணவர் உதவுதொகை ரூ. 44,526,000 குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களின் படி மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய மீதி 2,929,000 பெறுமதியாக இருப்பினும், ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்களின் படி அம் மீதி ரூ. 10,766,575 பெறுமதியாக காணப்படுவதனால் அம் மீதிகளுக்கிடையில் ரூ. 7,837,575 பெறுமதி இணக்கமின்மை காணப்படுகின்றது.

(ஐ) கட்டுபெத்த கைத்தொழில் எந்திரவியல் பயிற்சி நிறுவனத்தில் கற்கைநெறிகளை பயிலும் மாணவர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய ரூ. 2,456,000 பெறுமதி குறித்த நிதிக் கணக்கில் செலவு வைப்பதற்கு பதிலாக அதிகார சபையின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தினால் ஆண்டின் பற்றாக்குறை மற்றும் நலன்புரி நிதிக் கணக்கு அத் தொகையினால் குறைவினை காட்டியது.

(ஒ) காசுப் பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் சொத்துக்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுகளை ரூ. 38,281,274 பெறுமதியை

நிதிப் பாய்ச்சலாக காட்ட வேண்டியதோடு, அதனை ரூ. 42,175,247 பெறுமதியாக காட்டிய காரணத்தினால் முதலீட்டு செயற்பாடுகளில் உருவாகிய தேறிய காசுப் பாய்ச்சல் ரூ. 3,893,973 பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இவ் அறிக்கையின் நிதிக் கூற்றுக்களில் கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு, போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 அதிகார சபையின் 2023 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

---

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட அதிகார சபையின் 2023 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாயினும், நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது குறித்து எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காத தகவல்கள், ஏனைய தகவல்கள் இத்தால் கருதப்படுகின்றது. இவ் ஏனைய தகவல் குறித்து முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

எனது அபிப்பிராயத்தின் படி, நிதிக் கூற்றுக்களில் ஏனைய தகவல்கள் உள்ளடங்காததோடு, நான் அது குறித்த உறுதிப்பாட்டை அல்லது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்விற்கான, மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசிக்கும் போது, நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு முறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரையில் பொருண்மையாக, பொருத்தமற்றதாக இருக்கின்றனவா என ஆராய்ந்து பார்ப்பது எனது பொறுப்பாகும்.

இக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் எனக்கு கிடைக்கப்பெற்ற ஏனைய தகவல்களின் மீது, என்னால் செய்யப்பட்ட பணிகளின் அடிப்படையில், இங்கு ஏனைய தகவல்கள் பொருண்மையான முறையில் தவறாக காட்டப்பட்டுள்ளதாக என்னால் அவதானிக்கப்படுமாயின், அவ் விடயம் குறித்து என்னால் அறிக்கையிடப்படுதல் வேண்டும். இது குறித்து அறிக்கையிடுவதற்கு எனக்கு எதுவுமில்லை.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் ஆளுகை தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும், நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டு நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்குக் கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளின் இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று

காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்ளுதல். மோசடியானது கூட்டுச் சதி, கள்ளத்தனம் வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றை விடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு

அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பிலும் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் காண்புகள், உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பிரதான பலவீனங்ள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைத் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

**2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

.........................................................................................................................

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(அ) பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என்பதுடன், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு ஆணைக்குழு முறையான நிதி அறிக்கைகளை பேணியிருந்தது.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடக்கூடியனவாகும்.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முந்தைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள், பெறப்பட்ட சான்றுகள் மற்றும் பொருண்மையான விடயங்களின் வரையறைகளிற்கு உட்பட்டு, பின்வரும் கூற்றுக்களை தெரிவிக்கக் கூடிய அளவிற்கு வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், சபையினது ஆளுகைச் சபையிலுள்ள உறுப்பினர்களில் எவரேனுமொருவருக்கு சபையின் தொடர்புடைய ஏதேனும் ஒப்பந்தம் ஒன்றுடன் நேரடியான அல்லது மறைமுகமான விதத்தில் சாதாரண வணிக நிலைமையிலிருந்து விலகியதான தொடர்பு காணப்பட்டது என்றும்,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வருவனவற்றைத் தவிர்த்து, சபையின் ஏதேனும் எழுத்துருவிலான சட்டம் அல்லது ஆளுகைச் சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளிற்கு இணக்கமற்ற விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,

| சட்டவிதிகள்/ பணிப்புரைகளுக்கான குறிப்பு ................................................................. | அவதானிப்புகள் ............................... |
|---|---|
| (அ) 1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்கங் கொண்ட மூன்றாம் மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு சட்டத்தின் 15(1) ஆம் பிரிவு | அதிகார சபையின் தேசிய நிறுவனத்தினால் நடாத்தப்படும் 37 பகுதி நேர கற்கைநெறிகளில் எந்தவொரு கற்கைநெறியும் ஆணைக்குழுவினால் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி கோவையில் நிதி ஒழுங்குவிதி 396(இ) பிரிவு | அச்சிடப்பட்டு கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாமல் 06 மாதங்கள் காலங்கடந்து இருந்த ரூ. 1,298,541 பெறுமதியான 72 காசோலைகள் தொடர்பாக அனுப்ப வேண்டிய பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2015 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி 02/2015 ஆம் இலக்கங் கொண்ட 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி 02/2022 ஆம் இலக்கங் கொண்ட பொது நிறுவன சுற்றறிக்கைகள் | தொலைபேசி கொடுப்பனவு உரித்தாகாத பதவிநிலை உத்தியோகத்தர் அல்லாத பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்த தொலைபேசி இணைப்புகளுக்கு அதிகார சபையினால் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலகட்டத்தில் மொத்தம் ரூ. 6,462,922 பெறுமதியை மாதாந்த பட்டியல் ஊடாக மொபிடெல் (தனியார்) கம்பனிக்கு செலுத்தியிருந்தது. |

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், சபையின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்காத விதத்தில் செயற்பட்டிருந்தது என்றும்,

| அதிகாரங்கள், பணிகளும் பொறுப்புகளும்<br>................................................................... | அவதானிப்புகள்<br>.............................. |
|---|---|
| (அ) 1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்கங் கொண்ட மூன்றாம் மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு சட்டத்தின் 2 ஆம் பகுதியில் vi ஆம் அத்தியாயத்தில் 37(எ) பிரிவு | தொழிற் பயிற்சியை வழங்கும் நிறுவனங்களினதும் வேறு நிறுவனங்களினதும் பயிற்சிகளை பெறுவதற்கான வாய்ப்புகளை அபிவிருத்தி செய்வதற்காக அதிகார சபையினால் 2020 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் |

எந்தவொரு செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சபையின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், உற்பத்திதிறன் மிக்கதாகவும் குறித்த காலப்பகுதியில் சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகையை மேற்கொண்டு பயன்படுத்தியிருக்கவில்லை என்றும்,

பெறுகை வழிகாட்டி கோவையின் 8.9.1(அ) மற்றும் 5.4.10(ஆ) பிரிவுகளுக்கு மாறாக வழங்குநர்களுடன் எழுத்துமூல உடன்படிக்கையொன்று இல்லாது மற்றும் செயலாற்றுகை அவதானிப்பினை பெற்றுக்கொள்ளாது 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி 30 Desk Top கணனிகளை கொள்வனவு செய்வதற்காக ரூ. 8,025,000 செலவிடப்பட்டிருந்தது.

## 2.3 ஏனைய விடயங்கள்

(அ) கட்டுநாயக்க எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் தொழில்நுட்ப பயிற்சி நடவடிக்கைகளை விருத்தி செய்யும் கருத்திட்டத்தில் உள்ளடங்கிய ரூ. 73,804,932 பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16 ஆந் திகதி வரையில் கட்டுநாயக்க எந்திரவியல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. மேலும், ரூ. 87,588,591 பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் பயன்பாட்டுக்கு ஏற்றவாறு ஸ்தாபிக்கப்படவில்லை மற்றும் அவ் உபகரணங்களை பயன்படுத்துவதற்கு தேவையான ஏனைய உபகரணங்கள் கிடைக்கப் பெறாத காரணத்தினால் 02 வருடங்களுக்கும் மேலான காலம் விளைதிறனாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை வருடாந்தம் 100 இற்கும் அதிகமான மாணவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட சிவில் எந்திரவியல் பிரிவில் மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்தின் மூலமாக ரூ. 286,330,412 பெறுமதியான இருப்புகளில் எடுக்கப்பட்டதும் இருப்புகளில் எடுக்கப்படாத உபகரணங்கள் கிடைத்திருப்பினும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டிற்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை முறையாக 41 ஆனது 18 ஆக குறைந்து காணப்பட்டமையினால் இவ் உயர் பெறுமதியைக் கொண்ட பயிற்சி உபகரணங்கள் ஆகக்கூடிய பயனை பெற்றுக்கொள்ளக் கூடியவாறு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2020 ஆம் ஆண்டில் 70 மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்திருந்த Mechanical General Engineering கற்கைநெறிக்காக 2021 ஆம் ஆண்டில் ரூ. 661,111,008 பெறுமதியான உபகரணங்கள் பெற்றிருப்பினும், இவ் உபகரணங்களை விளைதிறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் உள்ளீர்ப்பு செய்யப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை முறையாக 31 ஆனது 25 ஆகியது. அதன்படி 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் மாணவர்களின் ஆட்சேர்ப்பு நூற்றுக்கு 64 இனால் குறைவடைந்திருந்தது.

(ஈ) துறைசார் திறன் விருத்தி கருத்திட்டம் மூலமாக அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள 2021 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரும் ரூ. 7,699,518 பெறுமதியான தொகை குறித்த கருத்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தியிருக்கவில்லை. அத்தோடு, அதில் ரூ. 7,000,000 பெறுமதி பணிப்பாளர் குழுவின் தீர்மானத்திற்கு அமைய நிலையான வைப்பு ஒன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) 2015 ஆம் ஆண்டில் துறைசார் திறன் விருததி நிதியின் மூலமாக அதிகார சபைக்கு வழங்குவதற்கு இணங்கியிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பெறுகை முறைகேடுகள் காரணமாக ரூ. 29 மில்லியன் இழக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஒழுங்குமுறையான விசாரணையை மேற்கொண்டு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2014 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை அதிகார சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததும் வேறு தேவைகளுக்காக 89 வெளிதரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த ரூ. 6,685,455 பெறுமதியான முற்பணங்கள் மீளாய்வாண்டில் டிசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அதிகார சபை சேவையிலிருந்து விலகியுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூ. 1,592,757 பெறுமதியான கடன் மற்றும் முற்பணங்களை உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலகிய சந்தர்ப்பத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபைக்குச் சொந்தமான 03 தேசிய நிறுவனங்களின் ஊடாக பயிலும் மாணவர்களிடமிருந்து மாணவ நலன்புரி நிதிக்கு அறவிடப்பட்ட நிதியை நலன்புரி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாமல் மீளாய்வாண்டில் டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் திறைசேரியின் அனுமதியின்றி ரூ. 48,995,619 பெறுமதியான தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) அதிகார சபைக்குச் சொந்தமான ஒருகொடவத்த மோட்டார் எந்திரவியல் பயிற்சி நிறுவன மாணவர்களிடமிருந்து மீளச் செலுத்தப்படும் என்ற அடிப்படையில் கடந்த ஆண்டுகளில் அறவிடப்பட்ட ரூ. 7,024,147 பெறுமதி 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு பணமும் மீள மாணவர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்கம மூன்றாம் மற்றும் தொழிற் கல்வி சட்டத்தின் நோக்கங்களில் இருந்து விலகி முறையான அங்கீகாரம் இன்றி ஆட்களை வெளிநாட்டு தொழில்களுக்காக அனுப்பும் நோக்கத்தில் 2022 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆந் திகதி NAITA Foreign Employment (Pvt) Ltd எனும் பெயரில் தனியார் கம்பனி ஒன்றை ஸ்தாபித்திருந்தது. 121 ஆட்களிடம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூ. 1,270,500 தொகையானது அதிகார சபையின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு, அத் தொகையிலிருந்து முறையான நியமனம் இல்லாத ஆளொருவருக்கு சம்பளம் மற்றும் எரிபொருள் கொடுப்பனவிற்காக ரூ. 402,955 தொகையும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்வதற்காக ரூ. 448,000 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

(ஓ) அதிகார சபையின் மோட்டார் எந்திரவியல் பயிற்சி நிறுவனத்தின் பயிற்சி நடவடிக்கைகளுக்கு பொருத்தமற்றதும் மூன்றாம் தரப்பினராலும் இறக்குமதி செய்யப்பட்ட அதி கொள்ளளவினை கொண்ட மோட்டார் வண்டியொன்றை விடுவிப்பதற்காக வரிசை அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு அமைய 2017 ஆம் ஆண்டில் அதிகார சபையினால் சுங்கம், துறைமுகம் மற்றும் தடையகற்றல் கட்டணமாக ரூ. 16,510,115 தொகை செலவிடப்பட்டிருப்பினும் மீளாய்வாண்டின் இறுதியிலும் அவ் வண்டியினை பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஔ) அதிகார சபைக்குச் சொந்தமாக அச்சீட்டு பிரிவொன்று இருப்பினும், பெறுகை வழிகாட்டி கோவையில் 2.8.4, 3.6.1(அ) மற்றும் (ஆ) பிரிவுகளுக்கு மாறாக மீளாய்வாண்டில் வெளி நிறுவனங்களின் மூலமாக அதிகார சபைக்குத் தேவையான புத்தகங்களின் அச்சீட்டுக்காக ரூ. 4,033,750 தொகை செலவிடப்பட்டிருந்தது.

டப்ளியூ.பீ.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி